**செய்தி வெளியீடு எண்:089** **நாள் : 21.02.2015**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, 24.2.2015 அன்று அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மற்றும் புதுவாழ்வுத் திட்டம் மூலமாக தனியார் பங்களிப்புடன் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி 67,000 ஏழை எளியோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆய்வுக் கூட்டத்தில் முடிவு .

மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் தலைமைச்செயலகத்தில் 20.2.2015 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப் பணிகளை திட்ட வாரியாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நாட்டின் முன்னோடித் திட்டங்களான தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் (தாய்), மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், சுகாதார வளாகங்கள், பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகள், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி மூலமாக கடனுதவி வழங்கும் திட்டம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகப் பணிகள் மற்றும் புதுவாழ்வுத் திட்டம் ஆகிய திட்டங்களை மக்கள் பயனடையும் வகையில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் வழங்கிய, மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, 67,000 படித்த ஏழை எளியோருக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மற்றும் புதுவாழ்வுத் திட்டம் மூலமாக தனியார் பங்களிப்புடன் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி நேரடி வேலைவாய்ப்புகள் வழங்க முடிவெடுக்கப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மற்றும் புதுவாழ்வுத் திட்டம் மூலமாக தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் நடைபெறும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் எட்டாம் வகுப்புக்கு மேல் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும், கணினி பணியாளர், கட்டுமானத் தொழில், ஓட்டுநர், மெக்கானிக், பின்னலாடை ஆகிய தொழிலில் பயிற்சி பெற்றவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் வழங்கப்பட உள்ளது. இந்த வேலைவாய்ப்பு முகாம்கள் **24.2.2015** அன்று அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் நடைபெற உள்ளது. இந்த வேலைவாய்ப்பு முகாம் குறித்த பத்திரிக்கைச் செய்திகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மற்றும் புதுவாழ்வுத் திட்டம் சார்பாக அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மூலம் அனைத்து பத்திரிக்கைகளிலும் வெளியிடப்படும். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தகுதிபடைத்த அனைவரும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்று நிரந்தர வேலைவாய்ப்பு பெற்று பயனடைய வேண்டும் என்பதே இந்த முகாமின் முக்கிய நோக்கமாகும்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி வி.அமுதவள்ளி, இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**